...கள் எட்டு:
...ல ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 1 செவ்வாய்ககிழமை 15-05-2001 தொலைபேசி: 3378 ஒலி 147

## ★ அரசியல் ஐயப்பாடுகளின் மத்தியில்
# தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்றார்!

### கூட்டணித் தலைவர்கள் வாழ்த்து

(சென்னை)

செல்வி ஜெயராம் ஜெயலலிதா நேற்று இரண்டாவது தடவையாக தமிழக முதல்வராக தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீப்பி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். சென்னை ஆளுநர் மாளிகையில் நேற்று மாலை 6மணிக்கு நடைபெற்ற எளிய நிகழ்ச்சி ஒன்றிலேயே ஆளுநர் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

முதல்வராகப் பதவியேற்றிருக்கும் செல்வி ஜெயலலிதா இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆறுமாதங்களுக்குள் ஏதேனும் ஒரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றாலேயே அவர் முதலமைச்சராகநீடிப்பார் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவி ஏற்பு வைபத்திற்கு முன்னதாக புதி... தெரிவு செய்யப்பட்ட அ. இ. அ. தி. மு. க. சட்டப் ...வஉறுப்பினர்கள் ஒன்று ...டி தங்கள் சட்டப்பேர...வைத் தலைவராக செல்வி ஜெயலலிதாவை ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

சட்டப் பேரவை உறுப்பினர்களின் சம்மதக் கடிதத்துடன் தமிழக ஆளுநர்செல்வி பாத்திமா பீப்பியை ஆளுநர் மாளிகையில் சந்தித்து தன்னை முதல்வராகப் பதவி ஏற்பதற்கு அழைக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

ஆளுநர் மாளிகையில் ஆளுநரைச் சந்தித்த ஜெயலலிதா அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### புதுவையில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி

(புதுவை)

புதுவைசட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 11இடங்களைக் கைப்பற்றி சட்டப் பேரவையில் பெரும்பான்மைக் கட்சிகளாக விளங்குகிறது.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுவைச் சட்டப் பேரவையில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க மூன்று அ இ அ தி. மு.கவும், இரண்டு இடங்

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஐந்து அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு

(சென்னை)

தமிழ் நாடு முதலமைச்சராகப்பதவி ஏற்ற அ. இ. அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் பதவி ஏற்பை அடுத்து ஐந்து பேர் அடங்கிய அமைச்சரவை ஒன்றை அமைத்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அ. இ. அ. தி. மு. க அமைச்சரவையில் சி. பொன்னையர், என். தம்பித்துரை, டி. ஜெயக்குமார், ஜயாகுவாண்டையா, ஆர் சனோகா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும்நேற்று மாலையே தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீப்பி முன்னிலையில் சத்திபபிரமாணம் செய்து கொண்டனர்

இந்த அமைச்சரவை மேலும் விரிவாக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது (வ)

### தமிழக முதல்வராக 'ஜெயா' பதவி ஏற்பதற்குத் தடை ஏதும் இல்லை

(சென்னை)

தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா பதவி ஏற்பதற்கு அரசியல் சாசன ரீதியில் தடை ஏதும் இல்லை

புதிய முதல்வராக செல்வி ஜெயலலிதாவை பதவி ஏற்குமாறு தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீப்பி அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பாகபத்திரிகையாளர் கேட்டகேள்விக்கு பதிலளிக்கையிலேயே காங்கிரஸ் கட்சி செய்தி தொடர்பாளர் ஜெய்பால் ரெட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-வ)

### யுத்தத்திற்கான ஆயுதப் பட்டியல் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிப்பு

(கொழும்பு)

...ன்மராட்சியில் இடம் ...ற அக்கினிச்சுவாலை -1 ...ணுவ நடவடிக்கை ...ம் தோல்வியில் முடிந்... அடுத்து படையின அத்தியாவசிய தேவை நவீனரக ஆயுதங் கொள்வவைு செய்வ...ன ஆயுதப் பட்டயடில் ஒன்று படைத்தரப்பு பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளது.

அண்மையில் பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான இராணுவ தளபாடங்களை பல்வேறு நாடுகளில் இருந்தும் அரசு கொள்வனவு செய்திருப்பதனால் இந்த ஆயுதக் கொள்வனவிற்கு அரசு அனுமதி வழங்கும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

தேசியபாதுகாப்பு சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இந்த ஆயுதக் கொள்வனவு குறித்தும், புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிக் கொண்டு கப்பல்வருவது குறித்தும் ஆராயப்பட்டது

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ...லியல்வல்லுறவுச்சம்பவம் ...ரு தமிழ் பெண்களும் ...லட்சம் கோருகின்றனர்

(மன்னார்)

...டந்த மார்ச் மாதம்இடம் ...ற்ற பாலியல் வல்லுறவுச் ...பவத்தில் பாதிக்கப் பட்ட இருதமிழ்பெண்களும் தமக்கு தலா பத்துஇலட்சம்ரூபா நட்...டாக வழங்கப் பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்

இது சம்பந்தப்பட்டவழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதி மன்றில் நேற்று இடம் பெற்ற பொழுதே மேற்கண்டவாறு தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்ற பிரதம நீதியரசரான சரத். என். சில்வா மற்றும் நீதியரசர்களான

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஆணையாளர் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய ஆணையாளராக எஸ். இராமலிங்கம் நேற்று பதவியேற்றுக்கொண்டார்.

இவரின் பதவியேற்பையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை ஏற்கனவேயிருந்த நிர்வாகக் கட்டமைப்புடன் இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

### தொலைபேசி சேவை நேற்று அவுட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமான தொலைபேசிச்சேவை நேற்று முழு நாளும் (இரவும் பகலும) இடம் பெறவில்லை.

கொழும்பு தொலைத்தொடர்பின்பரிவர்த்தனை நிலயத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறுகாரணமாக யாழ்ப்பாணத்துக்கும், பிற

(8ஆம் பக்கம் பார்க்க)

### படை வாகனம்மீது தாக்கு மூவர் பலியாகினர்

(கொழும்பு)

திருமலையில் இருந்து மின்னேரியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் மீது விடுதலைபபுலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத் தரப்பில் மூவர் பலியாகினர்.

விஷேட ஊடக மையம் நேற்று வெளியிட்ட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

அச் செய்தி மேலும் தெரிவிக்கையில்: பொலிஸ் காவலரணிற்கு சமீபமாக நேற்று முன்தினம் இடம் பெற்ற இத் தாக்குதலின் போது காவலரணில் பொலிஸார் எவரும் இருக்கவில்லை. அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த இருவரும் வேறு ஒருவரும பலியாகியுள்ளவர்களாவர். (க)

### மட்டுவில், நுணாவிலில் மீளக் குடியமர அனுமதி

[யாழ்ப்பாணம்]

...த...னர்த்தத்தால் மட்... நுணாவில் பகுதியிலி... ...டம்பெயர்ந்த மக்கள் ...டும் அங்கு குடியமர ...த் தரப்பு அனுமதிவழங்...ளது;

...மைச்சர் டக்ளஸ் தேவா...நா பாதுகாப்பு அமைச்சு...யலர் சந்திரானந்தடி சில்வாஇராணுவத் தளபதிஜெனரல்பலகல்ல, யாழ். இராணுவ பிரதிக் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் சந்திரபாலா ஆகியோருடன் நடத்தியபேச்சுவார்த்தையை அடுத்தே மேற்கண்ட அறிவிப்பு விடுக்க பட்டுள்ளது;

மட்டுவில் பகுதிக்கு30நாட்

(8ம் பக்கம் பார்க்க)

### ஈழத் தமிழர் துயர் துடைக்க தார்மீக ஆதரவை நல்கவும்
### தமிழகமுதல்வர் ஜெயாவிடம் கோரிக்கை

(சென்னை)

தமிழகத்துக்கு சிறப்பான ஆட்சியை வழங்கவுள்ள அ. இ. அ. தி. மு. கவு உலகில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் துயர்துடைக்கவும் அவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படவும் ஆதரவு நலகும் என நம்புகிறோம்.

இவ்வாறு ஈழத்தேசிய ஜனநாயக முன்னணி தமிழ் நாடு முதல்வராகப்பதவி ஏற்றிருக்கும் செல்வி ஜெயலலிதாவிற்கு அனுப்பி

(8ம் பக்கம் பார்க்க)



உ
சிவமயம்

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி
# அமுதசுரபி அன்னதான சபை

## ஆரம்பம் 1960 (வரைவுள்ளது)

**2001** **2001**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ல் ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை ''அமுதசுரபி'' என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 42வது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தர்மசிலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளர் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்;

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தும் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம் பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தர்மசிலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இவ்வாண்டு ஆனி மாதம் (07ம் நாள்) 21-06-2001 வியாழக்கிழமை அம்பாளின் மகோற்சவம் (திருவிழா) ஆரம்பமாகி ஆனி மாதம் 20ம் நாள் (04-07-2001) புதன்கிழமை தேர்த்திருவிழாவும் ஆனி மாதம் 21ம் நாள் (05-07-2001) வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 15 நாட்களும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசிலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம் பொருள் முதலியவற்றைக் கொடுத்து சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**த. சிவானந்தன்**
கௌரவ தலைவர்
'சாஸ்தா' 133, 5ம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11, தொலைபேசி 344960

**கு. சாந்தலிங்கம்**
கௌரவ செயலாளர்
அமுதசுரபி மண்டபம்
நயினாதீவு -2.

**நா. காராளபிள்ளை**
கௌரவ உப பொருளாளர்
விக்கினேஸ்வரா ஸ்ரோர்
நயினாதீவு - 6

(2131)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
## ஓராண்டு பூர்த்தி விழா - 16 - 05 - 2001

**நிகழ்ச்சி நிரல்**

கல்லூரிக் கொடியேற்றல் 8.30-835
மங்கள விளக்கேற்றல் 8.35-8.40

சிறப்புரைகள்:

வைத்திய கலாநிதி
10.55- 11.05

நியனமக் கடிதம்
பெற அழைப்பு
(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நியமனம் பெற்ற செல்வி சுதாமதி நல்லதம்பி இல. 106, செம்பியன் ஒழுங்கை கொக்குவில் என்ப

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
# ஓராண்டு பூர்த்தி விழா - 16 - 05 - 2001

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| கல்லூரிக் கொடியேற்றல் | 8.30-835 |
| மங்கள விளக்கேற்றல் | 8.35 8.40 |
| இறைவணக்கம் | 8.40-8.50 |
| தமிழ்த்தாய் வாழ்த்து | 8.50-8.55 |
| மங்கள இசை நாதஸ்வர வித்துவான் (திரு. பொன். தவராசா குழுவினர்) | 8.55-9.20 |

**வரவேற்புரை**

திரு. மு. கெங்காதரன்

**ஆசியுரை**

| | |
|---|---|
| ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர திருஞானசம்பந்த சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்) | 9.30-9.35 |
| பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் (தென்னிந்திய திருச்சபை) | 9.35-9.40 |

**தலைமையுரை**

| | |
|---|---|
| கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் (பீடாதிபதி, யாழ்ப்பாணம தேசிய கல்வியியற் கல்லூரி) | 9.40-9.55 |

**வாழ்த்துரை**

| | |
|---|---|
| திரு. க. மணிபல்லவராஜன் (தலைவர் பிரதேச சபை நல்லூர்) | 9.55-10.00 |
| திரு க. சண்முகநாதன் (அரச அதிபர் யாழ்ப்பாண மாவட்டம்) | 10.00-10.05 |
| பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) | 10.05 10.10 |
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் பீடாதிபதி (உயர் பட்டப்படிப்புக்கள் பீடம் யாழ் பல்கலைக்கழகம்) | 10.10 10.15 |
| கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை (மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்) | 10.15 10.20 |
| திருமதி செ மகாலிங்கம் (வலயக் கல்விப்பணிப்பாளர்) | 10.20 10.25 |
| திரு. சி. சிவராசா (வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்) | 10.25 10.30 |
| திரு. வி இராசையா (வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர்) | 10.30 10. 35 |
| திரு. ப. விக்னேஸ்வரன் (தீவக வலயக்கல்விப்பணிப்பாளர்) | 10.40 10.45 |
| திரு வ. செல்வராசா [தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்] | 10.45 10.50 |
| திருமதி ஆ. சிவஞானசுந்தரம் [அதிபர், யா. இராமநாதன் கல்லூரி] | 10.50 10.55 |
| திரு. மு பரஞ்சோதி அதிபர் யாழ் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை | 10 55 11.00 |
| திரு. கு. சதாசிவமூர்த்தி அதிபர் யாழ் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 11:00 10·00 |

**சிறப்புரைகள்:**

| | |
|---|---|
| வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா | 10. 55- 11.05 |
| பேராசிரியர்.க. சின்னத்தம்பி (தலைவர், கல்விப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்) | 11. 05-11 15 |
| திரு. க.இராசதுரை (தலைவர், வட மாகாண அதிபர் சங்கம்) | 11. 15. 11.20 |

**சிறப்பு விருந்தினர் உரை**

| | |
|---|---|
| திருமதி புவனா. இராமகிருஷ்ணா பிரதிக்கல்விப்பணிப்பாளர் கல்விக்கல்லூரிகள் பிரிவு கல்வியமைச்சு | 11.20 - 11.30 |

**பிரதம விருந்தினர் உரை :**

| | |
|---|---|
| திரு. நிமால் ஹேரத் பிரதம ஆணையாளர் கல்விக்கல்லூரிகள் பிரிவு கல்வியமைச்சு | 11.30.-11.45 |

**கலாசுரபி மலர் வெளியீடு**

| | |
|---|---|
| வெளியீட்டுரை: கலாநிதி பா. ஜெயராஜா | 11.45-12.20 |
| முதற்பிரதிபெறல்: பிரதம விருந்தினர் | |
| மதிப்பீட்டுரை வித்துவான் க. சொக்கன் | |
| இதழாசிரியர் பதிலுரை திரு. து. கிருபாகரன் | 12.20-12.25 |

## மதிய போசன இடைவேளை

**கலை நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| கர்நாடக இசை | 2.00-2.15 |
| தாண்டவம் | 2.15 2.20 |
| கதம்பம் | 2.20-2.35 |
| கவிதா நிகழ்வு | 2.35-2.45 |
| ஆங்கிலப்பாடல் | 2.45-3.00 |
| மீனவர் நாட்டார் இசை | 3.00-3.15 |
| ஆங்கில நாடகம் (The Merchantof Venice) | 3.15-4.00 |
| காவடி | 4.00-4.10 |
| நாடகம் 'யாரொடுநோகேன்' நெறியாள்கை குழந்தை ம. சண்முகலிங்கம்) | 4.10-500 |
| நன்றியுரை செல்வி நிவேதிதா கணேசன் | 5.00-5. 10 |
| கல்லூரிக்கீதம் | 5.10-5.15 |

அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்;

பீடாதிபதி, விரிவுரையாளர்,
மாணவர்கள், கல்விசாரா
ஊழியர்கள்.

[கி/1990]

## நியமனக் கடிதம் பெற அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நியமனம் பெற்ற செல்வி சுதாமதி நல்லதம்பி இல. 106, செம்பியன் ஒழுங்கை கொக்குவில் என்பவருடைய நியமனக்கடிதத்தை யாழ். வலயத்தில் வந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அறிவித்துள்ளன; (உ)

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இத்தாவில் பளையிலிருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்துவந்த பத்திநாதர் ஸ்கொலஸ்ரிக்கா (வயது 45) என்பவரைக் கடந்த 12ம்திகதிமுதல் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது;

இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் பேச்சி அம்மன் கோவிலடி சண்டிலிப்பாய் மத்தி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவர் ஒரு மனநோயாளி என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மூன்றாண்டுகளில் ஒரு லட்சத்து 50ஆயிரம் இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்குமென தொழில் அமைச்சு அறிவித்துள்ளது;

கூடுதலான வேலைவாய்ப்புக்கள் உள்ள துறைகள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் இதன்படி மோட்டார் வாகன உற்பத்தி, சுற்றுலாத்துறை, ஆடைத்தொழில், கட்டட நிர்மாணம் ஆகிய துறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன; (க-5)

# ஆரம்பக் கல்வியை அரவணைப்பதன் மூலமே பட்டப்படிப்பினைப் பயனுள்ளதாக்க முடியும்

எதிர் கால சமுதாயத்தை காத்திரமானதோர் சமுதாயமாக ஆக்கும் பொறுப்பு சம கால ஆசிரியர்களின் கையிலும் பாடசாலைகளிலுமே தங்கியுள்ளது. அதுவும் கூடுதல் பொறுப்பு ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளமை சுட்டிக்காட்டத் தக்கதோர் அம்சமாகும். ஆரம்பக் கல்விக்கு ஒழுங்காக சுவாசம் கொடுப்போமேயானால் நல்லதோர் எதிர்காலம் புத்தொளி வீசும் என்பது முற்றிலும் உண்மை. ஆரம்பக் கல்விக்குள்ளேயே பட்டப் படிப்பு உயிர் கொண்டுள்ளது என்பதை யதார்த்த உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதை உணர்ந்து கொண்டாலும் இதைச் செயற்படுத்த பலகாவலரண்களைத் தாண்ட வேண்டியுள்ளது. இத்தடங்கல்களை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்வதே நோக்கமாகும்.

### மாணவர் தொகை அதிகரித்தல்

இன்று ஆரம்பக் கல்விப் பாடசாலைகட்கிடையே பொதுவான அல்லது பொருத்தமான புரிந்துணர்வு காணப்படவில்லை. காரணம் தற்போதைய பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையைக் கூட்டுவதிலேயுள்ள போட்டி மனப்பான்மையாகும். இதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுவது கிராமப் புறப் பாடசாலைகளும் பிள்ளைகளுமே. சில பாடசாலைகளின் அதிபர்கள் அரசின் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கும், அமைச்சினதும் கல்வித் திணைக்களத்தினதும் சுற்று நிருபத்துக்கும் மதிப்புக் கொடுக்கும் அதேவேளையில் சில பாடசாலை அதிபர்கள் அவ்வாறு மதிப்புக் கொடுப்பதில்லை. உதாரணமாக தரம் ஒன்றில் இரண்டு பிரிவுகளை நடாத்த அனுமதி வழங்கப்பட்ட போதும், மாறாக மூன்று பிரிவுகளை ஆரம்பிக்கும் போது அப் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கின்றதேயன்றி அங்கு காணப்படும் வளப் பற்றாக்குறை கல்வி அடைவில் பாதிப்பையுண்டாக்கின்றது. மாறாக அயல்பாடசாலைகள் போதிய ஆசிரிய வளமிருந்தும் மாணவர். எண்ணிக்கை அரிதாகவே காணப்படுகின்றன.

இதனால் இங்குள்ள வளங்கள் வீண்போகின்றன. அத்துடன் அப்பாடசாலையின் வளங்களைச் சுரண்டுவதிலும் இது போன்ற பாடசாலைகள் திரை மறைவில் முனைவதும் கண் கூடு. எனவே இது விடயத்தில் அதிகாரமுடையவர்கள், புலமை சார் ஆய்வாளர்கள் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்வதும் சமூக நலனோம்பலை கருத்திற் கொண்டு செயற்படுவதும் வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கிராமப் புறப் பாடசாலைகளில் இந்நிலை மாறி மீட்சி பெறும் எனக் கருதப்படுகிறது.

### பெற்றோர் பொறுப்பு

இன்று கிராமப் புறத்தைச் சேர்ந்த தரம் ஒன்று பாடசாலைகளில் சில தரம் ஒன்று தொடக்கமும் சில தரம்ஆறு தொடக்கமும் வகுப்புக்களைக் கொண்டவை. வருட ஆரம்பத்தில் இப் பாடசாலைகள் மாணவர்களை ஈர்க்கும் விடயத்தில் தமது முழு அளவிலான நிபுணத்துவத்தைச் செலுத்தத் தவறுவதில்லை. இச் செயற்பாட்டில் சில பாடசாலைகள் உச்சப்பயனைப் பெறசிலமந்தநிலையைஅடைகின்றன. இதை நிர்ணயிக்கும்

**மு. விக்னேஸ்வரன்**
(கோப்பாய்)

பொறுப்பு ஆரம்பக் கல்வி மாணவர்களின் பெற்றோரின் கையிலேயே தங்கியுள்ளது. இங்கு மனிதனின் பெருமை மனிதத்துவத்தின் அளவுகோலாக மாறுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது, இக் குறைபாட்டை நீக்க புதிய கல்விச் சீர்திருத்த மறுசீரமைப்பு துணை புரியும் என எதிர் பார்க்கப்பட்ட போதும் இது வரை எட்டாக் கனியாகவும் முயற் கொம்பாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே தற்போது சில கல்லூரிகள் இக் குறைபாடுகளுக்கு வேலியிடும் வகையில் புதிதாக ஆரம்பப் பிரிவை ஆரம்பித்து முதன்மைப் படுத்தி உரமூட்டி வலுப் பெறச் செய்து பிள்ளைகளை புதிய வார்ப்புகளாக உருவாக்கி மாணவர்கள் எண்ணிக்கையைத் தங்கள் கல்லூரிகளில் அதிகரிக்கச் செய்ய முடியுமென கங்கணம் கட்டிக் கொள்ள முயல்கின்றனர். இந்நிலை தாச்சிக்குப் பயந்துபிள்ளைகள் அடுப்புக்குள் விழுவதற்கு ஒப்பாகும் என்பது புள்ளிவிபரங்கள் தருகின்ற அனுபவம்சார்ந்த உண்மையாகப்புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்காட்டி நிற்கின்றன. இணைப் பாட விதானச் செயற்பாடுகள், போட்டிகளின் முடிவுகள் போன்றவையும் மேலும்இதனை வலுவூட்டுகின்றன.

### கல்வி அபிவிருத்திக்கு அருஞ் சேவை

இங்குள்ள பரந்த பரப்பளவிலான நிர்வாகம் ஆரம்பக் கல்விக்கு ஊன்றுகோலாய் அமைவதில்லை. கூடுதலாக மேல் வகுப்பாசிரியர்கள் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களை மதிப்பதும் இல்லை. எனவே, இங்கு ஆரம்ப பிரிவை தொடங்குவதன் மூலம் மாணவர் எண்ணிக்கையைக் கூட்டலாமேயன்றி விவேக பூர்வமான வழிகாட்டலினூடாகக் கல்வி அபிவிருத்திக்கு அருஞ் சேவையாற்ற முடியாது. எனவே சிறிய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கட்கிடையேயான கூட்டு மொத்த கல்வி அபிவிருத்தியில் ?ர்களின் கரிசனையையும், அர்ப்பணிப்பையும் பயனுறுதி மிக்க செயற்பாட்டையும் முறியடிக்க முயலக் கூடாது.

இது வரை ஆரம்பக் கல்வி ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கதையாகவே நீண்டு செல்கிறது. முடிவைக் காண்பது என்பது முடியாத காரியம். காரணம் அரச பாடசாலைகளில் ஆரம்பக் கல்விக்கென அரச நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்திப் பயிற்சியுடன் தமது பொறுப்பைத் தட்டிக்கழித்து வேறு துறைகளில் பயிற்சி பெற்றுச் சென்று விடுகின்றனர். இதை வரவேற்பதில் ஆசிரியர் கலாசாலைகள் முக்கிய பங்கை வகித்தன. ஆனால் 2001ல் இத்துறை சார்ந்தோர் வேறுதுறைகளில் பயிற்சி பெற முடியாது என்ற வகையில் ஆரம்பக் கல்வித் துறை சார்ந்த முன்னேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கி பற்றாக் குறையை ஓரளவுக்கு நிவர்த்தி செய்து கலவி வாண்மைத்துவத்தை விருத்தியடையச் செய்யும் உத்திகள் முன்வைக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரியதே. இது போன்றே ஆரம்பக் கல்வி துறை சார் செயற்பாட்டிலும் பெரும் பதவிகளை வகிப்பவர்களையும், துறை சார்ந்த ஏனைய செயற்பாட்டில் உள்ளவர்களையும் மேல் நிலையிலுள்ளவர்களையும் ஆரம்பக் கல்வித்துறை சார்ந்தவர்களாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்வதும் வரவேற்கத்தக்கதே. சம காலத்தில் உள்ளவர்களில் கூடுதலானோர் வேறு துறை சார்ந்தவர்களாகவும் செல்வாக்குக்குட்பட்டவர்களாகவும் உள்ளமையால் ஆரம்பக் கல்வி வாண்மை கீழ் நோக்கிச் செல்வதைக் காணலாம். இதை விடப் பாடசாலை நிர்வாகமும் வேறு துறை சார்ந்தவர்களிடம் வழங்கப்பட்டுள்ளமையும் பொருத்தமற்றதே.

### அரசும், சமூகமும் கவனிக்க வேண்டும்

மேற கூறப்பட்ட பிரச்சினைகளை இனங்கண்டு விடுவிக்க ஆரம்பக்கல்விச் செயன் முறையில் அரசும், சமூகமும் பரவலாகக் கவனம செலுத்த வேண்டிய தேவை அண்மித்து விட்டது. ஒரு பிள்ளைகுறைந்தது ஆரம்பக் கல்வியையாவது பூர்த்தி செய்யவேண்டும் என்பது எதிர்பார்ப்பு. எனவே களத்துக்குச் சென்று கல்வித் துறையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியே பொறுப்பு நாட்டு மக்கள் அனைவரையும் சார்ந்ததே.

பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகத்தில் நம்பிக்கையுடையவராகவும் பிள்ளைகள ஆசிரியர் மீதுநம்பிக்கையுடையவர்களாகவும் செயற்பட இரு பகுதியினரும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கக் கூடாது எனத் திட சங்கற்பம் பூணும் போது ஆரம்பக் கல்வியானது ஏனைய கல்விக்குப் பலம் வாய்ந்த அத்தி வாரமாக அமையும் என்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே என்றும் ஆரம்பக் கல்வியை அரவணைபபோம்.

## தீயில் எரிந்த குடும்பஸ்தர் பரிதாபகரமாய் மரணம்

(மந்திகை)

பலத்த எரிகாயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிறன்று சிகிச்சை பலனளிக்காத நிலையில் அங்கு மரணமானார்.

புலோலி புற்றளையைச் சேர்ந்த சந்திரசேகரப்பிள்ளை நாகேஸ்வரன் (வயது 52) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

மேற்படி இறந்த நபரது மனைவியும், கணவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட வேளை எரிகாயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

## முகவர் நிலையங்களின் அனுமதிகள் இரத்து

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற இலங்கையர்களை அனுப்பி வந்த 10 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த முகவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பலர் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாலும், ஒழுங்கான வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படாமையாலுமே இவ் இரத்துச் செய்யும் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

1998 ஆம் ஆண்டு 8 முகவர் நிலையங்களுக்கும், 2000 ஆம் ஆண்டு 10 முகவர் நிலையங்களுக்கும் இவ்வாறு அனுமதி இரத்துச்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

குடிசன மதிப்பீடு

## ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் ஓரங்கமாக இடம்பெற்ற சிவப்பு லேபல்கள் ஒட்டப்படும் பணி இடம் பெறாத,

வீட்டுக்கூறு, கூட்டு வசிப்பிடம், நிறுவனம், வசிப்பிடமல்லாத கட்டடம் குறித்த விபரங்களை உடன் செயலகத்தில் உள்ள புள்ளி விபரங்களை அலுவலக அதிகாரி த சிவகுமாரனுடன் நேரடியாகவோ,

இல்லாவிடின் 3330 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தெரியப் படுத்தி குடிசனமதிப்பீடு நீதியான முறையில் இடம்பெற ஒத்துழைக்குமாறு புள்ளி விபரத்திணைக்களத்தினர் குடாநாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (உ-10)

## இலங்கைக்கு வந்த அமெரிக்கர் எங்கே?

(கொழும்பு)

இலங்கை வந்த அமெரிக்கப் பிரஜை ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி முதல் காணாமற்போயிருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த மேற்படி நபர் ஏப்ரல் 17 ஆம் திகதி இரவு பாங்கொக்கில் இருந்து விமானம் மூலம் கொழும்பு வந்தார் எனவும்,

மறுநாட் காலை முதல் காணாமற் போய்விட்டதாகவும் அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. (உ)

## விபத்தில் காயம்

(மந்திகை)

மந்திகைப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் துவிச்சக்கரவண்டி விபத்துச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையை சேர்ந்த தங்கவேலாயுதம் ஜெயசங்கர் (வயது34) என்பவரே காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (உ-23)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்து விளையாட்டுக் கழக ஆதரவில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடாத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இணுவில் மத்திய சந்தை மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

பி. ப 3 30 மணிக்கு பல்கலைக்கழக வி.க. எதிர் இந்து இளைஞர் வி க பி ப 4 30 மணிக்கு ஐக்கிய வி க ஏ) எதிர் இணுவில் இந்து வி.க. மோதவுள்ளன (உ-10)

## இராசி பலன்

15 5 2001
(வைகாசி 1, செவ்வாய்)
அட்டமிபி இ 4 27 வரை
அவிட்டமபி இ 3 07வரை
ராகுகாலம் . 2 53 - 4 23
நலலநரம 10 23 - 11 . 53
சிததம

**மேடம்**
கீர்த்தி, காரியம் கைகூடும் தன லாபம, குடும்ப சுகம்.

**இடபம**
தொழில்சிறப்பு, அதிகாரம் முயற்சி கைகூடும், சுப நிகழ்ச்சி.

**மிதுனம்**
கட்டுப்பாடு, அச்ச நிலை புதிய திட்டம முயறசி தாமதம.

**கடகம்**
வியாதி, வீண் தொல்லை பிரயாணபயம், திடீா நனமை

**சிங்கம்**
பிரயாணம் போசன சுகம் அபூர்வ சந்திப்பு, கௌரவம.

**கன்னி**
எதிரிகளால் நன்மை, தேக நலம, முயற்சி விருததி, சந்தோச நிலை.

**துலாம**
புத்திரரால் கவலை, வியாபார மேன்மை, காரிய இடையூறு. சகோதரர் நன்மை

**விருச்சிகம**
தாய் வழி உதவி, தன்னம்பிக்கைக்குறைவு, காரிய அனுகூலம, பதட்டம.

**தனுசு**
வாக்கு மேன்மை, அன்னியர் சநதிப்பு, பிரயாணம காரிய நன்மை.

**மகரம**
பொருள் விரயம், வீண் விவாதம, காரிய தாமதம் மாதர் நட்பு.

**கும்பம**
செல்வாக்கு, நண்பர்கள் உதவி, கறபனை மிகுதி போசன சுகம.

**மீனம்**
பிரயாணம், உணர்ச்சி வசபபடல், பொருள் விரயம் முயற்சி தாமதம

(பழையநேரப்படிகணிப்பிடப் பட்டது)

வளவன்

**மனச்சோர்வை. . .**

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணுக வேண்டும் தற்கொலை எண்ணம் உடையவர்களும் மனச்சோர்வு உள்ளவர்களே. அவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி அவசியம் என உணர்தல் வேண்டும்.

# செய்தித் துளிகள்

## கட்டடப்பணி பூர்த்தி

(நல்லூர்)

திருநெல்வேலிப் பொதுச் சந்தைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும், புதிய கட்டடத் தொகுதியின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன

விரைவில்கட்டடக் கடைத் தொகுதிகள் வாடகைக்கு விடப்படவுள்ளன. நல்லூர் பிரதேச சபை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (உ-103)

## அடிப்படை வசதிகள் இல்லை

[வடமராட்சி கிழக்கு]

அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் தொடர்ந்தும் பளை மத்திய கல்லூரி இயங்குகிறது.

யுத்த நடவடிக்கையால் இப்பாடசாலை பருத்தித்துறையில் தனியார் கல்வி நிலையம் ஒன்றிலும் முதலாம் கட்டையடியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மர நிழலில் இருந்து கல்வி பயில்கின்றனர். (உ-43)

## பாராட்டு விழா

(நல்லூர்)

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநவுக்கரசு கமலநாதன், ''கலாநிதி'' பட்டம் பெற்றமையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக, நாயன்மார்கட்டு வாழ்மக்களும் கோப்பாய் வாழ்மக்களும், இணைந்து கல்வியியற்கல்லூரியின் அனுசரணையுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தேசிய கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் பாராட்டுவிழா நடாத்தவுள்ளனர்.

லயன் டாக்டர் வை. தியாகராஜா தலைமையில் இப்பாராட்டுவிழா நடைபெறவுள்ளது. (உ-103)

## பொலிஸார் திடீர் சோதனை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் தண்ணீர்த் தாங்கி சந்திப் பகுதியில் நேற்றுக் காலை பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

வீதியினால் செல்வோர் நிறுத்தப்பட்டு அடையாள அட்டை பரிசீலிக்கப்பட்டதுடன் உடற் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் மோட்டார் வாகனங்களும் நிறுத்தப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் போன்றனவற்றையும் பரிசீலினைக்குட்படுத்தினர். (உ-59)

## புனருத்தாரணம்

(நல்லூர்)

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. (உ-103

## பட்டப்பகலில் திருட்டு

(நல்லூர்)

கந்தர்மடம் சேர் பொன். இராமநாதன் வீதிப் பகுதியில் இல்லம் ஒன்றின்முன்பாக வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிபட்டப்பகல்வேளையில் திருட்டுப் போயுள்ளது. (உ-103)

## கராத்தே சுற்றுப்போட்டி

(ஈச்சமோட்டை)

யாழ் சோட்டோக்கான் கராத்தே அக்கடமியினால் அதன் ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக கடந்த 13 ஆம் 14 ஆம் திகதிகளில் கராத்தே உள்ளக சுற்றுப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இதில் பெரும் எண்ணிக்கையான அங்கத்தவர்கள் பங்கேற்று கராத்தே வடிவமைப்புக்கள் பலவற்றை செய்து காட்டினர். (உ-59)

## பொருள் விநியோகம் சீரில்லை

[நல்லூர்]

''திருநெல்வேலிப் பகுதியில் உள்ள, நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையமொன்றில் நத்தை வேகத்தில்'' பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகப் பொது மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது. (உ-103)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய பூங்கா வீதி குருநகர் என்னும் முகவரியைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை நியூட்டன் என்பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுளளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (ஆ-ர்)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையமுன்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியைகள் பிரதேச சபையின் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறவுள்ளனர்.

முன்பள்ளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 21ஆசிரியைகளே இக்கொடுப்பனவைப் பெறுவர். (உ-103)

## பத்திரிகைத்துறை அலுவலர் பதவி

(கல்வயல்)

இலங்கை அரசாங்க தகவல் திணைக்களத்தில் பத்திரிகைத் தொடர்புத் துறை அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தியுடன் பத்திரிகைத் துறையில் 10 வருட அனுபவம் உள்ளவர்கள அல்லது 2 வருட பத்திரிகைத்துறை அனுபவமுடைய பட்டதாரிகள் அல்லது 3 வருட அனுபவமுள்ள கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா சான்றிதழ் பெற்றோர் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

இது பற்றிய பூரண விபரங்கள 1182 ஆம் இலக்கமுடையதும் ஏப்ரல 27 ஆம் திகதியிட்டதுமான வர்த்தமானிப் பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் உள்ளது. (உ-111)

## வீதி விஸ்தரிப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி பொதுச் சந்தையை அண்மித்த ஆடியபாதம் வீதியின் இருமருங்குகளும் அகலப்படுத்தப்பட்டுவருகின்றன.

பொது மக்களின் போக்குவரத்து நலன் கருதி இவ் விஸ்தரிப்பு வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ-103)

# நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த கொள்ளையர் மூவர் கைதாகினர்

(கொழும்பு)

நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த மூன்று கொள்ளையர்களை முகத்துவாரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யும் போது, கொள்ளையர்வசமிருந்தகைத் துப்பாக்கி மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி மூன்று நபர்களும் பலகாலமாகவே பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும்,

இவர்கள் தொடர்பாக 10 இற்கும் மேற்பட்டவழக்குகள் நீதிமன்றங்களில் பதிவாகி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இக்கொள்ளையர் கைதாகியதையடுத்து, வேறு சில கொள்ளைக் கும்பல்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியிருப்பதாகசம்பந்தப்பட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர். [உ]

## வீட்டுத்தோட்டத் திட்டம் வெற்றிகர செயற்பாடு

(தென்மராட்சி)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை, கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் தோட்டத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுவருவதாக கூறப்படுகிறது.

இத்திட்டத்தில் 6 ஆயிரம் பயனாளிகளுக்கு உள்வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும்இத்திட்டத்தில்முன்னுரிமை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## தீ விபத்து

[கொழும்பு]

இரத்தின புரியிலுள்ள நீதிமன்றக்கட்டடத்தொகுதிஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் அக்கட்டடம் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றது.

இத் தீவிபத்தின் போதுநீதிமன்றத்தின்ஆவணங்கள்வைக்கப்பட்டிருந்த அறையும், வழக்கு ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த அறையுமேஎரிந்து சாம்பலாகியது. [செ]

## வாழ்வகப் பிள்ளைகளின் வாழ்வை மேம்படுத்த உதவி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இயங்கும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கான வாழ்வகம் இல்லத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக மேலும் ஒரு தொகுதி நிதியினை ஒதுக்கவுள்ளதாக வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் ஈ. பி. டி. பியின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை வாழ்வகம் இல்லப் பணிப்பாளர் மற்றும் வாழ்வக இல்ல முகாமைத்துவக் கமிட்டி உறுப்பினர் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்திய போது இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டது. (உ)

## நிர்வாகிகள் தெரிவு

[மந்திகை]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்கோப்பாய் பிரிவில் தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

பிரிவினுடைய தலைவராக வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, உபதலைவராகஇராசதுரைசெயலாளராகஇ.மயில்வாகனம், பொருளாளராக கெ. காண்டீபன்ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக வே. தயாளன் இ. தவகோபால், சி. கதிர்காமநாதன் பொ. சிவானந்தன், எஸ். ஜே, செல்லத்துரை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். [உ-23]

## கிராம அலுவலர்க்கு உடனடி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணையினை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின் வரும் கிராம சேவகர்களை உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஜே/74-யாழ்ப்பாணம், ஜே/78-அத்தியடி ஜே/84-நாவாந்துறை, ஜே/97-வண்ணார் பண்ணை, ஜே/149- பண்டத்தரிப்பு, ஜே/308நுணாவில் மேற்கு, ஜே/289- கைதடி கிழக்கு, ஜே/292- கைதடி மேற்கு, ஜே/263-உரும்பிராய் மேற்கு, ஜே/295- நாவற்குழி தெற்கு, ஜே/297-கைதடி, நாவற்குழி. (உ-10)

## விண்ணப்பிக்குக

(கல்வயல்)

தொழில் நுட்பக்கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தொழில் நுட்ப வலர்ப்பயிற்சி நிறுவகம், எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

18 வயதுக்கும் 25 வயதுக்குமிடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (உ-111)

## பெயர் மாற்றப் படிவம் 25 ரூபாவாக அதிகரிப்பு

[மந்திகை]

பருத்தித்துறை நகரசபையினால் வழங்கப்படும்ஆதனவரி பெயர்மாற்றப் படிவம் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை காலமும் 5ரூபாவாக விநியோகிக்கப்பட்ட படிவம், இம்மாதம் முதல் 25 ரூபாவாக விநியோகிக்கப்படும் எனதெரியவந்துள்ளது. [உ-23]

## புகையிலை எடுத்தவர் பூரான்கடிக்குஇலக்கானார்

(மந்திகை)

உலரவிடப்பட்ட புகையிலையை எடுத்துக் கொண்டிருந்த வேளைஅதனுள்ளிருந்த பூரான் கடிக்கு இலக்கானவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டிப் பகுதியில்நடைபெற்ற இச் சம்பவத்தினால் மந்திகையைச் சேர்ந்த பரமு தியாகராஜா [வயது 64] என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-23]

## உதைபந்தாட்ட அணி இன்று புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி திட்டமிட்டவாறு இன்று கிழக்கிலங்கை புறப்படுகிறது.

அணியின் தலைவராகதர்மகுலநாதன் செல்கிறார்.

இவர்கள் பங்குகொள்ளும் போட்டிகள் இம் மாதம் 19. 20. 21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-10)

## இராணுவ வீரரின் மரணத்தில் சந்தேகம்

(கொழும்பு)

புதைக்கப்பட்ட இராணுவ வீரர் ஒருவரின் சடலத்தினை தோண்டி எடுக்குமாறு பாணந்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நிமோனியாக் காய்ச்சல்காரணமாக மரணமானதாகக் கூறி புதைக்கப்பட்ட டிலீப் பிரசந்த பெரேரா என்ற இராணுவவீரரின்சடலத்தை, அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தாயார் கொடுத்த முறைப்பாட்டை அடுத்துதோண்டிஎடுக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

மேற்படி படை வீரர் பணிபுரிந்த குடாஓயாதனமல்வில முகாம் ஆலோசகரால் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டதாக அவரின் தாயார் முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இடம் மாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எஸ். எஸ். யேசுநேசன் வரணி வைத்திய சாலைக்கு இம் மாதம் முதல் இடமாற்றப்பட்டுள்ளார். (உ-23)

## இன்று ஒரு தகவல்

# இழிந்த குணமுடையோர் இழி செயலில் ஈடுபடுவர்

இழிந்த குணமுடையவனுக்கு ஒரு போதும் உயர் குணம் உண்டாகாது. ஒரு காட்டில் 'சாந்தானந்தர்' என்ற ஒரு தபோதனர் தவம் செய்துகொண்டிருந்தார். அக்காட்டில் உள்ள சகல விலங்குகளும் அவரிடம் குழந்தைகள் தகப்பனாரிடம் வந்து மரியாதை காட்டுவது போல தினம் காலையில் வந்து வணங்கி விட்டுப் போகும். அம்முனிவரிடம் யானையும் வரும், பூனையும் வரும், எலியும் வரும், புலியும் வரும், நரியும் வரும், பரியும் வரும்வண்டும் வரும், நண்டும் வரும்.

ஒருபலவீனமான நாய், அதன் உடம்பில் பலபுண்கள். அச்சொறி நாய் அம் முனிவரிடமே வளைந்து வளைந்து சுற்றிக் கொண்டிருக்கும். ஒரு நாள் இந்த நாயைக் கொல்ல ஒரு ஓநாய் வந்தது. சொறி நாய் நடுங்கி நடுங்கி முனிவரைத் தஞ்சம் புகுந்தது. முனிவர்பெருமான் கமண்டல நீரைத் தெளித்து 'நீயும் ஓநாயாக ஆகக் கடவது' என்றார். உடனே சொறி நாய் ஓநாயகமாறியது. இந்தஓநாய் வந்த ஓநாயை விரட்டி விட்டது.

மற்றொரு நாள் இந்தஓநாயைக் கொல்லச் சிறுத்தைப் புலி வந்தது. ஓநாய் முனிவரைத்தஞ்சம்புகுந்தது. முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதைச் சிறுத்தைப் புலியாக்கி விட்டார். இச் சிறுத்தை அச் சிறுத்தையை விரட்டி விட்டது. பின் அது சிறுத்தைப்புலியாகவேகம்பீரமாகக் காட்டில் உலாவியது. ஒரு நாள்சிறுத்தைப்புலியைக் கொல்ல ஒரு யானைவந்தது. சிறுத்தை முனிவரைத்தஞ்சம் புகுந்தது. கருணை நிறைந்த முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதனை யானையாக மாற்றி விட்டார்.

வேறொரு நாள் இந்த யானையைக் கொல்ல வேங்கைப் புலி பாய்ந்து வந்தது. யானை முனிவரிடம் அடைக்கலம் புகுந்தது. உடனே தவசீலர் அதனை வேங்கைப் புலியாக மாற்றி விட்டார், அது வேங்கையாகஉலாவியது. இன்னும் ஒரு நாள் இந்தவேங்கையைக் கொல்லச் சிங்கம் வந்தது. வேங்கை முனிவரைத் தஞ்சம் புகுந்தது, முனிவர் அதனைச் சிங்கமாக மாற்றி விட்டார். வந்த சிங்கத்தை இந்தச் சிங்கம் விரட்டி விட்டது.

புதிய சிங்கம் அக்காடு முழுவதும்உலாவியது. மிருகராஜாவான அச் சிங்கம்அக்காட்டில் பெருமிதமாக வாழ்ந்தது. ஒரு நாள் அது தனக்குள் சிந்தித்தது. 'முனிவர் கருணைமிகுந்தவர். சொறி நாயாகிய நம்மை மிருகவேந்தனாகச் செய்தார். ஒருவேளை அவர் என்னைப் பழையபடி நாயாகச் செய்தாலும் செய்யக் கூடும். அவரிடம் கமண்டல நீர் இருக்கிறது. அன்றி வேறு சிறிய பிராணியைக் கருணையினால் சிங்கமாகவும்மாற்றக் கூடும். நான்என்றும்சிங்கமாக இருக்க வேண்டுமாயின் முனிவர் இருக்கக் கூடாது. ஆதலால்அவரைக்கொன்று தின்று விடவேண்டும்.' என்றுமுடிவு செய்தது.

முனிவர் கண் மூடி நிஷ்டையிலிருக்கும் போது அசிங்கமுள்ள அச் சிங்கம் அவரைக் கொல்லப் பின் புறமாக வந்தது. எல்லாம் அறிந்த அம் மாதவமுனிவர் புன்னகை செய்து 'நீஇப்படி ஆனாயே, வா நாயே' என்றார். அந்த வினாடியேஅதுசொறிநாயாக ஆகிவிட்டது. முனிவர் 'நாயே உன் மீது பிழையில்லை உன்னை உயர் பதவியில் வைத்த என் மீதுதான்பிழை. இழிந்த குணமுடையவனை உயர் பதவியில் வைத்தால் இழிந்த புத்தி தானேயிருக்கும்' என்றார். நாய் தன்அறிவின்மையை நினைத்து துயரமுற்றது.

**திருமுருக கிருபானந்த வாரியார்**

# பருத்தித்துறை சாலையில் போதிய பேருந்துகள் இல்லை ஊழியர்களுக்கும் பற்றாக்குறை

(கல்வயல்)

பருத்தித்துறைச் சாலையில் இருந்து 7 பேருந்துகள் பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக சாலையின்உதவி முகாமையாளர்வல்லிபுரம்திருமுருகராசா தெரிவித்தார்.

இருப்பினும் புற்றளை, கொற்றாவத்தை, இமையாணன், கெருடாவில், வதிரி போன்ற இடங்களுக்கான பாடசாலைச் சேவையை நடாத்துவதில்.

போதியளவு பேருந்துகள் இன்மை, ஊழியர் பற்றாக்குறை, வீதிகள் விசாலம் போதாமை ஆகியவை இடையூறாக இருப்பதாகவும்

சுமார் 17 பேருந்துகளைக் கொண்டு 22 இற்கு அதிகமான பாதைகளில் சேவைகளை நடாத்தி வருவதாகவும் மேலும் தெரிவித்தார். (உ-111)

# கோட்டை முனியப்பர் ஆலயம் புனரமைப்பு விரைந்து நடவடிக்கை

## கல்விற்பனை நிலையங்கள் இயங்க ஆரம்பம்

(தென்மராட்சி)

மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள கைதடிப்பிரதேசத்தில் சாவகச்சேரி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் சீவல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன்காரணமாக கைதடி மேற்கு, கைதடி வடக்கு, கைதடி மத்தி ஆகிய மூன்று இடங்களில் கள் விற்பனை நிலையங்கள் மீளவும் திறக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கி. பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-77)

## கோட்டை முனியப்பர் ஆலயம் புனரமைப்பு விரைந்து நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் தேவஸ்தான புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முனியப்பர் தேவஸ்தான சபையினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதை அடுத்து இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அமைச்சரின் பணிப்பின் பேரில் ஈ. பி. டி. பி. யின் இந்துசமய விவகாரங்களுக்குப் பொறுப்பானவலிதென்மேற்குபிரதேச சபைத் தலைவர் திருலோகநாதன், சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன், ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான க. மணிபல்லவராஜன் ஆகியோர் முனியப்பர் ஆலயத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன்,

ஆலய தேவஸ்தான சபையினருடனும் கலந்துரையாடி ஆலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை ஒன்றினை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளனர். (உ)

## பெரு நாள்

[ஈச்சமோட்டை]

கடந்த ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த பற்றிமா அன்னை பெரு நாள் ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் அமைந்துள்ளபுனிதபத்திமாஅன்னை ஆலயத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. [உ-59]

## கலாசாரப் பேரவை

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைஞர்கள் அடங்கிய கலாசாரப்பேரவை அப்பிரதேச செயலர்அலுவலகத்தினரால்அமைக்கப்பட்டுள்ளது.

இயல்,இசை,நாடக முத்தமிழ்க் கலைஞர்கள் இப்பேரவையில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (உ-103)

## தரம் உயர்வு

(கல் வயல்)

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் தரம் 2 அதிபராகக் கடமையாற்றிய கு. கதிர்காமசேகரர் கல்வியமைச்சால் இலங்கை அதிபர் சேவை தரம் 1க்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (உ-111)

## அடிக்கடி வேட்டொலி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கடற்கரையை அண்டிய பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் அடிக்கடி கேட்ட வண்ணமுள்ளன.

இரவுவேளைகளில் 'பரா' வெளிச்சம் பாய்ச்சப்பட்டு வேட்டுக்கள் தீர்க்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ் வேட்டொலிகள் இராணுவத்தினர் பயிற்சியின் போது தீர்க்கப்படுவதாக அப்பகுதிகளை அண்டி வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். [உ-59]

## ஒத்துழைப்பு இல்லை

[தென்மராட்சி]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் செயல்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கொழும்பிலுள்ள தலைமையகத்தினதோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் ஒன்றியத்தினதோ ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை என யாழ். கிளையின் உபதலைவரான பொ. பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக குறிப்பாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கின்ற குடும்பங்களின் சுகாதார மற்றும் மருத்துவ தேவைகளைப் பூரணப்படுத்த முடியாமலுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (உ-77)

## அங்குரார்ப்பணம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் நிலவும் மனித உரிமை மீறல்கள் சம்பவங்களை வெளியுலகிற்கு எடுத்துக் கூறி அவற்றினை ஆவணப்படுத்தும்பொருட்டு யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் நிறுவனம் ஒன்றினை கோவில் வீதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த நிறுவனத்தை அங்குரார்ப்பணம்செய்வதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [உ-77]

## புராதன புத்தர் சிலை சேதமாக்கப்பட்டது

(கொழும்பு)

உடுநுவரவிலுள்ள கடலதெனியாவின் வரலாற்றுப் புகழ் மிக்க பௌத்த விகாரையின் புராதன புத்தர் சிலை பெருமளவு சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியாவின் உத்தரவின் பேரில் இந்த நாசவேலை பற்றி பொலிஸார்புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தியானம் செய்தபடி இருக்கும் புத்தரின் இந்தச் சிலையினை 14 ஆம் நூற்றாண்டில் சிங்கள மன்னர்கள் அமைத்தனர் எனக் கூறப்படுகிறது

தொல்பொருட்களை வியாபாரம் செய்பவர்களின் கைங்கரியமாக இது இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (உ)

## வானொலி கலைஞர்தெரிவு 21 இல் நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வானொலி கலைஞர்களுக்கான தெரிவிற்காக வடக்கின் அபிவிருத்தி அமைச்சின் ஊடகத்துறை நடாத்தவுள்ள நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி, வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வானொலி கலைஞர் தெரிவிற்காக தகமையுடையவர்களிடமிருந்து வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள அமைச்சின் ஊடகத்துறை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சுயவிபரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 18 ஆம் திகதிக்குமுன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சின் ஊடகத்துறை கேட்டுள்ளது (உ)

## அரசிற்கு எதிராக தமிழ்க்கட்சிகள்செயற்படா ஜீ. எல். பீரிஸ் நம்பிக்கை

[கொழும்பு]

நோர்வேயின சமாதான முயற்சி கனிந்து வரும்வேளையில் அரசிற்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு தமிழ் கட்சிகள் ஆதரவு வழங்க மாட்டார்கள,

இவ்வாறு அரசியல் விவகார கைத்தொழில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ் தன்னைச் சந்தித்த தமிழ் அரசியற் கட்சி தலைவர்களிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இனபபிரச்சினைத் தீர்வு விடயததில்இது வரை ஐக்கிய தேசியக கட்சி ஆதரவு எதுவும வழங்கவில்லை என்றும கடந்த ஒஸ்ட மாதம முன் வைத்த அரசியல தீர்வுத் திட்டத்தை எதிர்த்த ஐக்கிய தேசியக கட்சி அடிப்பேது நோர்வேயின சமாதான முயற்சியை குழப்பியடிக்கும் யோசனையில செயற்பட்டு வருகிறது எனவும கூறியுள்ளார். (உ-5)

## பாரம்பரிய தற்காப்பு கலைகளை பாதுகாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய தற்பாதுகாப்புக் கலைகளை பேணிப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை தனது அமைச்சு மூலம் எடுக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடமராட்சி சிலம்பயாழி இன்ரநெஷனல் பெடரேசன் பிரதிநிதிகள் ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்த போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலங்காலமாக எமது முன்னோர்களிடையே நிலவி வந்த தற் பாதுகாப்புக் கலைகள் பல அருகி விட்டன. இந்த தற் பாதுகாப்புக் கலைகளை பேணிப்பாதுகாத்து இன்றைய நவீன சமூகத்திற்கும் இவை கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அதற்கான சகல நடவடிக்கைகளையும எமது அமைச்சு மூலம் எடுக்கவுள்ளோம். முதற் கட்டமாக எமது பிரதேசத்தில் பிரதேச செயலர் மட்டத்தில் பாரம்பரிய தற்பாதுகாப்புக் கலைகளின் போட்டி ஒன்றினை நடத்த உரிய ஏற்பாடுகளை மேற் கொள்ளவுள்ளோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## நாடாளுமன்றில் அடிபிடி எம். பியின்காதில் ஒருகடி

(லண்டன்)

ஜோர்தானிய நாடாளுமன்றத்தில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பின் போது ஒரு உறுப்பினரின் காதை மற்றவர் கடித்துத் துண்டித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் வலது காதின் ஒரு பகுதியை இழந்த நாடாளுமன்ற உறுப்பினர் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று அறுந்த காதினை மீளவும் பொருத்திக் கொண்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜோர்தானிய சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார். (உ-9)

# தமிழக அரங்கில் மீண்டும் ஜெயா

# ஓயாத அலையாய் ஊழல் தொடருமா?

கருத்துக் கணிப்புக்கள் எதிர்பார்த்தபடியே தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. ஆனால் அ. இ. அ. தி. மு. க இவ்வளவு தூரம் தொகுதிகளைத் தன்வசப் படுத்தும் என்று எவரும் எண்ணி இருக்கவில்லைத்தான் 96 இல் நடைபெற்ற தேர்தலில் ஆக நான்கு இடங்களை மட்டுமே தனதாக்கிக் கொள்ள முடிந்த அ. இ. அ. தி. மு. க விற்கு திடீரென இவ்வளவு ஆனைப் பலம் எங்கிருந்து வந்ததென்று எண்ணுவதில் வியப்பேதுமில்லையே!

### விசித்திர முடிவு

ஆனால் தமிழக மக்களின் மனநிலையைத்தான் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது வீசுகின்ற தென்றலைக் கூடப்படம் பிடித்துவிடலாம் ஆனால் இவர்களின் மனதில் அரசியலைப்பற்றி என்னதான் எண்ணுகிறார்கள் என்று எழுதிவிடவே முடியாது.

தம்மை அழிக்கப் போகிறதென்று தெரிந்தும் தலையில் தீச்சுவாலையை ஏந்த தயாராகும் மெழுகுவர்த்திகளைப் போல 1996 இற்கு முற்பட்ட ஆட்சியில் இமாலய ஊழல் புரிந்து மக்களின் வளத்தை எல்லாம் தன் காலடியில் கட்டி வைத்திருந்த ஒரு கறுப்பு மனக்காரியைத்தான் தம் தலைவி என்று இப்போது தலையில் தூக்கி வைத்திருக்கும் மக்களின் மனநிலையை எப்படித்தான் எழுதுவது? சென்றமுறை உதவாத ஆட்சியென்று ஒதுக்கிவைத்து விட்டு இப்போது மட்டும் எதைக் கண்டு இப்படி முடிவெடுத்தார்கள் என்று இங்கே அனேகர் பேசுவது அவர்களது காதில் விழ நியாயம் இல்லை.

### ஜெயாவின் நன்றிக்கடன்?

தனது கட்சி அறுதிப் பெரும்பான்மை இடங்களை பெற்றதையடுத்தும் தன்னை நம்பிய, அ. இ. அ. தி. மு. க கூட்டணியின் வெற்றிக்கு தோளோடுதோள் நின்றுழைத்த கூட்டணிக் கட்சிகளை கைகழுவி விடப் போவதாக ஜெயலலிதா அறிவித்துள்ளதானது அவரது இருண்டமனதை திறம்பட வெளிக் கொணர்கிறது. ஆக ஆரம்பத்திலேயே தன்னை ஒரு நம்பகமற்றவர் என்பதை விலாவாரியாக விளக்கிச் சென்றுள்ளது அவரது மேற்படி அறிவிப்பு.

### ஈழத்தவர்க்கு உதவியாம்

இநநிலையில் ஈழத்தமிழர்களிற்கு புரட்சித் தலைவரின் வழியில் தான் உதவி செய்யப் போவதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார். ஒருவருக்கு அளவுக்கு மிஞ்சிய துக்கம் அல்லது மகிழ்ச்சி வந்துவிட்டால் அவர் தன்நிலை மறந்து உளற முற்படுவது சகஜமே என்கிறது உளவியல். இந்த வகையில் தான் அவரது கூற்றும் அமைந்திருக்குமே தவிர இதில் எதிர்பார்க்க ஒன்றுமே இல்லை என்று எம்மவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

### கருணாநிதிக்கு வந்த கேடு

அதேவேளை சென்ற முறை ஆட்சியில் கருணாநிதி தன்னை சிறைக்கனுப்பிய சீற்றம் தணியாத நிலையிலேயே ஜெயலலிதா உள்ளார். அதனால்தான், தான் வெற்றிபெற்று விட்டேன் என அறிந்த உடனேயே முதலாவதாகச் செய்த நற்பணி (?) கருணாநிதியின் மகன் ஸ்ராலின் ஊழல் விவகார கோப்புக்களையும் கருணாநிதிக்கான அவதூறு அறிக்கைகளையும் பத்திரப் படுத்துமாறு அறிவித்துள்ளார். தான் ஆட்சிக்கு வரப் போகிறேன் என அறிந்த உடன் தன்னை வெற்றிபெறச் செய்த மக்களுக்கு என்ன செய்யலாம் என்று எண்ணுவதை விட்டுவிட்டு கலைஞரின் காலை எவ்வாறு ஒடிக்கலாம் என்பதில் தான் ஜெயலலிதா குறியாகி இருக்கிறார் இந்த நிலையில் கருணாநிதியின் நிலை மிகப் பரிதாபகரமானது. தமிழக மக்களை மலை போல் நம்பி ''வெல்வேன் வெல்வேன்'' என்று வீராப்புப் பேசிக் கொண்டு ஜெயலலிதாவை மீண்டும் எப்படி சிறைக்கனுப்பலாம் என்பதில் குறியாக இருந்தவருக்கு அ.இ.அ.தி.மு.க. விற்கு கிடைத்த அமோக வெற்றி அவரை ''ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு'' இட்டுச் சென்றுள்ளது.

### தோல்வியுடனே முற்றும்பயணம்

இதுதான் தனது இறுதித் தேர்தல் என அறிவித்ததான் ''இன்று போய் போர்க்கு நாளை வருகிறேன்'' என்று கூட கூறமுடியாத அளவிற்கு கருணாநிதி இடிந்து போயுள்ளார். ஆக ஏறத்தாள அரை நூற்றாண்டாய் அரசியல் களத்தில்ஆடிக்கொண்டிருந்த கலைஞர் இறுதியாக தன் நீண்ட அரசியல் பயணம் தோல்வியுடனேயே முற்றுப்பெறுவதை எவ்வாறு தாங்கிக் கொள்ளப் போகிறார்??

**தொகுப்பு ரீ. ரீ. மயூரன்**

## இத்தாலிபொதுத்தேர்தலில் இடதுசாரி வெற்றிபெறும்?

(ரோம்)

இத்தாலியில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரான்ஸில் கோறிப்பேரியின் தலைமையில் போட்டியிட்ட ஆளும் இடதுசாரிக் கூட்டணிக்கும் முன்னாள் பிரதமர் ஸில்வியோ பெருசலோனியின் தலைமையில் போட்டியிட்ட வலது சாரிக் கூட்டணிக்கும் இடையில் பெரும் போட்டி நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி தேர்தலில் பெருந் தொகையான மக்கள் வாக்களிக்கச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மேற்படித் தேர்தலில் இடதுசாரிக் கூட்டணி வெல்வதற்கு அதிக வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

## இந்திய பிரதமர் வாஜ்பாய் மலேசியா பயணமானார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மலேசியா போய்ச் சேர்ந்துள்ளார்.

இந்த நான்கு நாள் விஜயம் தென்கிழக்காசிய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்குடனேயே மேற் கொள்ளப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு ஆண்டு காலத்தில் இந்தியப் பிரதமர் ஒருவர் மலேசியா சென்றுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இதேவேளை, இந்தியாவின் முன்னணி வணிகத்துறையினர் 70 பேரும் வாஜ்பாயுடன் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## ஸ்பெயின் தேர்தலில் வசிக் கூட்டணி வெற்றி

(லண்டன்)

ஸ்பெயினின் வாஸ்க் பிராந்தியத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற தேர்தலில் வசிக் தேசியவாதக் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறி உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மேற்படித் தேர்தலின் போது ஓரிரு தேர்தல் வன்முறைகளும இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. (உ-9)

## எமக்கு ஏற்பட்ட வெற்றி எதிர்பார்த்த ஒன்றே

### ஜெயலலிதா வெற்றிப் பெருமிதம்

(சென்னை)

அ இ அ தி மு க. விற்கு இந்தப் பெரு வெற்றி கிடைத்திருப்பதற்குக் காரணம் தமது ஆட்சிமீது மக்கள் வைத்துள்ள அசையாத நம்பிக்கையும் நல்லெண்ணமுமே என்று அ இ அ தி மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

தாம் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் போதே மக்களின் கணிசமான ஆதரவு தமக்கு இருப்பதை உணரக்கூடியதாக இருந்ததாகவும் மேற்படி முடிவு எதிர்பார்த்த ஒன்றே எனவும் ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளார்.

மக்களின் முடிவு அ.இ.அ.தி.மு.க.ஆட்சியை மக்கள் விரும்புகிறார்கள் என்பதோடு தி மு.க. ஆட்சியை அவர்கள் எந்தளவு வெறுத்துள்ளனர் என்பதையும் காட்டுவதாக ஜெயலலிதா கூறியுள்ளார். (உ-9)

## பங்களாதேஷில் மண்சரிவு 31 பேர் மாண்டனர்

(டாக்கா)

பங்களாதேஷில் பெய்து வரும் கடும்மழையினால் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 31 பேர் உயிர்இழந்ததுடன், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஒருவாரகாலமாக தொடர்ந்து மழைபெய்து வருவதால், பங்களாதேஷில் மின்சாரம் மற்றும் தொலைபேசி, விவசாயம் போன்றவற்றில் பெரும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### செய்திப்பரல்

★ கானாவில் 130 பேர் நெரியுண்டு இறந்ததையடுதது அங்கு 3 நாள தேசிய துக்க தினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

★ மஸடோனியாவில் தேசிய அரசு அமைக்கப்பட்டாலும் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லையென அல்பேனிய கெரில்லாக்கள் கூறுரைத்துள்ளனர்.

★ பாலியல் குற்றம் புரிந்த அமெரிக்கர் ஒருவர் இந்தோனேஷியாவில் இருந்துபிலிப்பைன்ஸிக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்.

★ வேர்ஜினியாவில் உள்ள போதை பொருள் தடுப்பு சமூக நிலையத்தில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் போதை எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

★ 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு கியூபா ஜனாதிபதி பிடல் கஷ்ரோ மலேசியா சென்றுள்ளார். (உ-9)

## விசாரணைகளுக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் சம்பந்தமான விசாரணை நடத்திவரும் விசேட புலனாய்வு பிரிவினர் பின்வரும் சாட்சிகளை யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளன.

வேலுச்சாமி ராஜேந்திரன் 963 கே கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
சாட்சி: ரமேஸ் விமலதாஸ் 29, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம.

செல்லத்துரை செல்வக்குமார் 11,4 பென்ரிக்கேஸ் லேன் கச்சேரியடி யாழ்ப்பாணம்.
சாட்சி:-செல்லத்துரை பரமநாயகி.

நவரட்ணம் கதிர்காமர் 456, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
சாட்சிகள்:- வைத்தியலிங்கம் கணேசலிங்கம் முத்தையா கிருபாகரன் சில்லாலை பண்டத்தரிப்பு, சுப்பிரமணியம் இராசமணி மாகியம்பதி சண்டிலிப்பாய், கந்தசாமி காளி கோவிலடி திருநெல்வேலி.

கந்தையா அருள்தரன் 22/15, வைரவர் கோவிலடி அரியாலை மேற்கு.
சாட்சி:-வே. சத்தியகுமார் 21, கலைமகள் வீதி, அரியாலை.

தவராசா சிவரூபன் வட்டுக்கோட்டை தெற்கு.
சாட்சிகள்:-தவராசா றூபராஜன் கந்தையா சிவசம்பு தவராசா.

சேனாதி தர்மபாலா 245, ஏ. பி வீதி அரியாலை.
சாட்சிகள்:-தமயந்தி மலர்.

துரைராசா பாலச்சந்திரன் செம்மணி வீதி, அரியாலை.
சாட்சிகள்:-சுகந்தி ஜெயராசா, துரைராசா ஜெயராசா கந்தையா.

இராசையா சுதர்மன் 110, உப்புக்குளம் கொழும்புத்துறை.
சாட்சி:-சந்திரன் சித்திரா.

மகேந்திரம் பாபு 697, கச்சேரியடி யாழ்ப்பாணம்.
சாட்சி:-சின்னத்தம்பி மகேந்திரம் விஜயகுமார் சாந்தா.

தங்கராசா ரமேஸ் 111/1 பொன்னம்பலம் வீதி, அரியாலை.
சாட்சி:-தங்கராசா சறோசா (உ-10)

## நேர்முகத் தேர்வு

[யாழ்ப்பாணம]

அண்மையில் இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நேர்முகத் தேர்வுகளில் இதுவரை பங்கு கொள்ளத் தவறியவர்களைஇன்றுகாலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் சபைமுன் சமுகம் கொடுக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் என். தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார். [உ]

## வீடுகளுக்கு மின்னிணைப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் திருநெல்வேலி கலாசாலை வீதிப்பகுதியில் உள்ள தொழிலாளர் விடுதியின் 8 வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதுடன், அங்குள்ள குழாய்க் கிணற்றினைத் திருத்திக் கொடுப்பதற்கான ஒழுங்கினைமேற்கொண்டுள்ளனர். (உ-103)

படைகுடி கூழ்அமைச்சு
நட்(பு) அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு
- குறள்

## வலம்புரி

### கலைஞருக்கு சிறையில் சீவியம்?

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. கவின் அமோகவெற்றி உலகெங்கிலுமுள்ள அரசியலாளர்களுக்கு நல்ல தொருபாடமாகஅமைந்து விட்டது.

சட்டரீதியாகநீதிமன்று எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மேலாக ஆளுங் கட்சி என்ற அதிகார தோரணையில் தனி நபருக்கு எதிராக பழிவாங்கும் படலம் நடந்தால், அதற்கு மக்கள் மகேசனாக மாறித் தீர்ப்பளிப்பார்கள் என்பதே தமிழக சட்டசபைத் தேர்தல் தந்த பாடமாகும்.

கலைஞர் மு. கருணாநிதி தனது ஆட்சிக்காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார் என்ற ஆராய்ச்சியை விட, முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் விடயத்தில் அவர் தனது ஆட்சி அதிகாரத்தை அதீதமாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அதுமட்டுமன்றி தனது ‘போர்வாள்’ என்று கலைஞரேவர்ணித்த வை.கோ. வை. இரண்டாவது தடவையாகவும் தி மு க வின் கூட்டணியிலிருந்து விலகிச் செல்லவிட்டது கலைஞரின் மாபெரும் தவறாகும்.

# மனச்சோர்வை நீடிக்க விடுதல் ஆபத்தானது

## உழைப்பும், உற்சாகமும் உகந்த மருந்தாகும்

மனச் சோர்வு அனைவருக்கும் ஏற்படும் ஒரு அனுபவம் தான். ஏதாவது ஒரு நேரத்தில் மன அமைதியின்மை, மனவருத்தம், ஏமாற்றம், கவலை, குழப்பம், விரக்தி, வெறுப்பு ஏற்படுவதுண்டு. நமக்கு நெருக்கமானவரின் இழப்பு அல்லது பொருள் இழப்பு போன்றவை ஏற்பட்டு நம்மை வருத்தத்தில் ஆழ்த்திவிடும். துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு விடும். சுய பச்சாத்தாபத்தில் மனம் ஆழ்ந்து விடும். வாழ்க்கை வெறுத்து விடும். நமக்கு ஏன் இவ்வாறு இருக்கிறது என்பதும் புரியாது;

### காரணங்கள் பல

சாதாரண மனச்சோர்வுக்கு, பெரும்பாலும் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். உதாரணமாக உடல் நலமின்மை, நெருங்கிய ஒருவரை இழந்த மனக்கசப்பு, அதிகப்படியான வேலை, களைப்பு, stress எனப்படும் மன இறுக்கம், வேலை இன்மை அல்லது உறவு முறைகளில் ஏற்படும் பிரச்சினைகள், கடன் தொல்லை மனிதமனம் மெதுவாக இப்பிரச்சினைகளைச் சமாளிக்க முயற்சி

## மருத்துவ விளக்கம்

செய்யும். சில நாட்களில் பழைய உற்சாகம் திரும்பும். ஆனால், சிலருக்கு இம்மனச்சோர்வு குறையாமல் நாட் செல்லச்செல்ல அதிகமாகும்; அல்லது குறிப்பிட்ட காரணம் இல்லாமலும் மனச் சோர்வு ஏற்படும். சிலநேரத்தில் சரியான காரணம் இருந்தாலும் மனச்சோர்வுஅந்தக்காரணத்திற்குச் சரியான விகிதத்தில் இருக்காது. மனச்சோர்வு சிலருக்குத் திடீரென்றும்,

போனால் மாதக் கணக்கில் இந் நோயினால் அவதியுற நேரிடும். சரியான சிகிச்சை முறையில் மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டவர்கள் 80% பேருக்கு உதவிகிடைக்கும்,

### மனச்சோர்வின் அறிகுறிகள்

★ வருத்தமான உணர்வு, பயவுணர்வு, அல்லது உணர்வு மரத்த நிலை.

★ வாழ்க்கையில் எந்த விஷயத்திலும் உற்சாகத்தையும் ஈடுபாட்டையும் இழத்தல். சிறு வேலை செய்யவும் ஆர்வமற்று இருத்தல்.

★ சிறு விஷயங்களிலும் முடிவெடுக்கத் திணறுதல்.

★ உணவு உண்ண ஆர்வமின்மை அல்லது அதிகமான உணவு உண்ணுதல்.

★ உடல் எடை குறைதல், கூடுதல்.

★ தூக்கமின்மை அல்லது அதிகப்படியான தூக்கம்.

★ உடல் உறவில் விருப்பமின்மை.

★ தன்னம்பிக்கை இழப்பு, மற்றவர்களைச் சந்திக்க விருப்பமின்மை.

★ குற்ற உணர்வு, தான் எதற்கும் உபயோகமற்றவர் என்ற உணர்வு, உதவிக்கு யாரும் இல்லை என்ற உணர்வு.

★ தீமையே நடக்கும் என்று எதிர்பார்க்கும் குணம்.

★ சக்தி குறைவு, அதிகப்படியான களைப்பு.

★ அமைதியற்ற நிலை, அதிகப்படியான கோபம், சிடுசிடுப்பு.

★ கவனக்குறைபாடு, ஞாபகமறதி.

★ அழுகை ★ தலைவலி

உதவி செய்யும். கவுன்சலிங்கில் குழு சிகிச்சை முறையும் பயன்தரும மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர்கள் 8 லிருந்து 10 பேர்வரை குழுவாக அமர்ந்து தங்களுக்கு மனச்சோர்வு எவ்வாறு ஏற்பட்டது? அறிகுறிகள் என்னென்ன? அதிலிருந்து வெளியேவர என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டோம் போன்ற தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் உறுதுணையாகயிருந்து மனச்சோர்விலிருந்து வர முயற்சி செய்யலாம். இந்தக் குழு சிகிச்சைமுறை பெரும்பாலும் ஒரு கவுன்சலிங் முன்னிலையில் நடக்கவேண்டும். சிலருக்கு நோயின் தன்மையைப் பொறுத்து ஆன்ட்டி டிப்ரஸன்ட எனும் மருந்துகளின் துணை அவசியமாகிறது. இம் மருந்துகள் அவருடைய பயம், பதட்டம், மனச்சோர்வு ஆகியவற்றைக் குறைக்கின்றன. மருந்துகளை அதிகநாட்கள் (குறைந்தபட்சம் மூன்று மாதங்கள்) உபயோகிக்க வேண்டியிருப்பதால் அவை பழக்கமாகிவிடும். அல்லது அவற்றிற்கு அடிமையாகிவிடுவோம் என்ற பயம் தேவையில்லை. மருந்து உட்கொண்ட அடுத்தநாளே நோயின் தன்மை குறையாது.

ஆன்டி டிப்ரஸன்ட் மருந்களை உடகொள்ளும் பொழுது குடி, போதைப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும் இம்மருந்துகள் அதிக தூக்கத்தைக் கொடுத்தாலும் அவை தூக்க மாத்திரைகள் அல்ல. அவை மன இறுக்கத்தைத் தளர்த்திச் சோர்வைக் குறைக்கும். கவுன்சிலர் எனப்படும் மன நல ஆலோசகரிடம் மனம்

களையும் உண்ணுதல் அவசியம் பசியெடுக்காமலிருந்தாலும் அடிக்கடி பழச்சாறு அருந்துதல் நலம் மனச்சோர்வுஉள்ளவர்கள் பசியின்மையால் உண்ணாதிருந்தால் விற்றமின் குறைபாடு ஏற்படும். அதனைத் தவிர்க்க விற்றமின் மாத்திரைகளையும் உண்ணலாம். பொதுவாக உணவில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை சத்துள்ள சரிவிகித உணவு உண்ணுதல் நலம் தூக்கம் வருவது கடினமாக இருந்தாலும். படுக்கையில் உடலைத் தளர் நிலையில் கிடத்தியபடி றேடியோ கேட்டல, ரீ.வி. பார்த்தல் கூடஉடலுக்கு தேவையான ஓய்வினைக் கொடுக்கும். மனம் தளர்ச்சி நிலையில் இருந்தால் தூக்கம் தானே வரும். உடலைததளர் நிலையில் வைத்து மூச்சை ஆழமாக இழுத்து உள்ளடக்கிமெதுவாக வெளிவிடும் பயிற்சியை அடிக்கடி செய்தால் மனம் இலகுவாகும்.

### குடிவகை பகை

மனச்சோர்வு இருக்கும் பொழுது அதைமறக்கக்குடிக்கலாம் என எண்ணுவது தவறு. குடிபோதைப் பொருட்கள் மனச்சோர்வை அதிகப்படுத்துமே தவிரக் குறைக்காது. காலையிலிருந்து இரவுவரைஎந்தநேரம் என்ன செய்ய வேண்டும் எனத்தினசரி வாழ்க்கை முறையை நியதியாக்கிக் கொள்ளுதல் நக்கது. தினசரி உடற்பயிற்சி உடலில் என்டார்ஃபின் எனும் திரவத்தின் உற்பத்தியை அதிகப்படுத்தும். இத்திரவங் களைப்பை நீக்கி மனச்சோமவைக் குறைக்கும் உ: ற்

**டாக்டர் வி. ரி. சுனிதா**
உளவியல் நிபுணர்

வை. இரண்டாவது தடவையாகவும் தி மு க வின் கூட்டணியிலிருந்து விலகிச் செல்லவிட்டது கலைஞரின் மாபெரும் தவறாகும்.

குடும்ப அங்கத் தவர்களை அரசியலின் முன்னாசனத்தில் இருத்த முனைந்தால், தான் இருந்த ஆசனத்தையும் விட்டெழ வேண்டி வருமென்பதை கலைஞர் மு. கருணாநிதி பவள விழாக் கண்ட பின்பு உணர்ந்து கொண்ட நல்லதொரு பட்டறிவாகும்.

ஈழத்தமிழர்களின் துன்பங்களையும், மரணங்களையும் தமக்கு மாலையாக்கிய தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் ஆளுங் கட்சியுடன் சேர்ந்துநின்றபோது ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க முனையவேயில்லை. இத்தகைய சந்தர்ப்பவாத அரசியல் தமிழ் நாட்டில் மிகவும் மலிவென்பது ஏற்கனவே உணரப்பட்ட உண்மையே.

எதுவாயினும் செல்வி ஜெயலலிதா ஆட்சி பீடமேறியவுடன் முதலில் செய்யவுள்ள கருமம்கலைஞர் கருணாநிதியை தான் இருந்த சிறைக்கு அனுப்பி வைப்பதேயாகும். கடைசி காலத்தில் கலைஞருக்கும் சிறையில் சீவியமென்பது எழுதப்பட்ட விதியாகி விட்டது.

---

இல்லாமலும் மனச் சோர்வு ஏற்படும். சிலநேரத்தில் சரியான காரணம் இருந்தாலும் மனச்சோர்வுஅந்தக்காரணத்திற்குச் சரியான விகிதத்தில் இருக்காது. மனச்சோர்வு சிலருக்குத் திடீரென்றும், சிலரிடம் படிப்படியாகவும் தோன்றும். மனச்சோர்வின் அளவும் ஒருவருக்கொருவர் மாறுபடும். சில சூழ்நிலைகள் குறிப்பாக தனிமை, ஆதரவற்ற தன்மைஆகியவை மனச்சோர்வை அதிகப்படுத்தும்.

## ஆட்டிப்படைக்கும்

சிலருக்கு இந்த மனச்சோர்வு வாழ்வை ஆட்டிப் படைக்கும் முக்கிய உணர்வாகிவிடும். வாழ்வில் தினந்தோறும் செய்ய வேண்டிய கடமைகளைக்கூட ஒழுங்காகச் செய்ய முடியாத நிலை ஏற்படும். தனிப்பட்ட மனிதருடைய மன இயல்பும், மன நிலையும் நோயின் தன்மையை அதிகப்படுத்தியோ அல்லது குறைக்கவோ செய்யும். ஆண்களை விடப்பெண்களுக்குஉளச் சோர்வு அதிகம் ஏற்படுகிறது. பத்தில் ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறந்தவுடன் மனச் சோர்வு ஏற்படுகின்றது. மனச் சோர்வு கண்டவர்களில் பத்தில் ஒருவருக்கு அடிக்கடி மனச் சோர்வுஏற்படுவது போலவே சில குறிப்பிட்ட நாட்கள் மிகுந்த சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். இது Mood DIsorder அல்லது ManIc Lepression எனப்படும் மன நிலை மாற்றத்தின் அறிகுறியாகும்.

மனச்சோர்வு ஒரு மனிதனின் தனிப்பட்ட பலவீனமோ அல்லது நினைப்போ அல்ல. அதனை உடனே உதறிவிடப் பெரும்பான்மையோருக்கு மருத்துவ உதவி அவசியம் தேவை; இல்லாது

யான களைப்பு.

★ அமைதியற்ற நிலை, அதிகப்படியான கோபம், சிடுசிடுப்பு.

★ கவனக்குறைபாடு, ஞாபகமறதி.

★ அழுகை ★ தலைவலி அசீரணம், உடல்வலி போன்ற நிரந்தர உடல் உபாதைகள்,

★ தற்கொலை எண்ணங்கள்.

இந்த அறிகுறிகள் மனச்சோர்வினால் தாக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி தேவைஎன்பதை அவருடைய குடும்பத்தினருக்கும், எத்தகைய மருத்துவ உதவி என்பதைத் தீர்மானிக்க அவருடைய குடும்ப மருத்துவருக்கும் உதவியாக இருக்கும்.

மனவருத்தம் மனச்சோர்வின் அறிகுறியாக இருந்தாலும் அது எப்பொழுதும் முக்கியமான காரணமாக இருக்காது. மனச்சோர்வு சாதாரணமானதும், ெறிகியகாலம் இருக்கக் கூடியதிலிருந்து நீண்ட நாட்கள் இருக்ககூடிய தீவிரமான வகைவரை பல வகைகள் உண்டு. சில நேரங்களில் உயிருக்கு ஆபத்தான அளவில்கூட இருக்கும். மேற்கூறிய அறிகுறிகளில் ஒரு சில அல்லது பல இருந்தால் அவர்கள் உடனடியாக மன நல மருத்துவரிடம் மருத்துவ ஆலோசனை பெறுவது நலம்.

## சிகிச்சை முறை

சிலருக்கு மனம்திறந்து பேசித் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டாலே ஒரு ஆறுதல் கிடைக்கும், நண்பர்களிடமோ அல்லது உறவினரிடமோ பகிர்ந் கொள்ள மனமிருக்காது. இதற்காகப் பயிற்சிபெற்ற மனநல ஆலோசகர் அல்லது சமூகசேவை ஆலோசகரிடம் பகிர்ந்துகொள்ள கவுன்சலிங் எனும் சிகிச்சைமுறை மனச்சோர்விலிருந்து வெளிவர

---

# டாக்டர் வி. ரி. சுனிதா

உளவியல் நிபுணர்

திறந்து பேசுவதும், சிற்சில மாற்றங்களை மனதிலும். செயலிலும் ஏற்படுத்திக் கொள்வதும் மனச்சோர்வைக் குறைக்கும்.

## மனச்சோர்விலிருந்து மீளல்

மனச்சோர்வு இருப்பவர்கள் தங்களுக்கு மனச்சோர்வு இருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களுக்கும் ஏதாவது ஒரு சமயத்தில் இவ்வாறு மனச்சோர்வு ஏற்படும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். உலகிலேயே தங்களுக்கு மட்டும்தான் ஏதோ நடந்து தங்களுடைய வாழ்க்கைப்பாதை மட்டுமே மாற்ற முடியாதஅளவு பாதிக்கப்பட்டு இருப்பதாக எண்ணக் கூடாது. எண்ணங்களிலும், நடத்தையிலும் சிறிது மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டால் இதிலிருந்து வெளிவருவது சுலாபம் என்பதையும புரிந்துகொள்ள வேண்டும். மாவுச்சத்துப் பொருட்கள் மனச்சோர்வை மாற்றும் குணமுடையவை. மாவுச்சத்துள்ள உணவுகளை மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை குறிப்பிட்ட அளவு உண்ணலாம். அடிக்கடி உணவு உண்டாலும் கட்டுப்பாட்டுடன் உண்ண வேண்டும். சோறு, ரொட்டி, உருளைக்கிழங்கு ஆகியவை மாவுச்சத்து உள்ள உணவுகளாகும்.

## ஓய்வு

காப்பி, ரீ வகைகளைக் குறைத்து பசுமையான காய்கறிகளையும், புதிதான பழங்

பயிற்சி உடலைச் சரியாக வைத்துக் கொள்ள உதவும் அதன்மூலம் தூக்கம் சரியாக ஏற்படும காலை வேளையில் உடற்பயிற்சி செய்ததும். உணவில் இரண்டு பேரீசசம் பழத்தையும், நிறையத் தண்ணீரையும சேர்த்துக்கொள்ள வேண்டும் திறந்த வெளியில் நிறையப் பிராணவாயுவைச் சுவாசிக்க நடப்பதும சிறந்தது உடலில் வேறு உபாதைகள இருப்பின் அவற்றிற்கும் தேவையான மருந்துகளை மருத்துவரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## தனிமை கூடாது

இது தவிர நண்பர்களுடன் மனந்திறந்து பேசுதல் தனிமையாக இருக்காது குழந்தைகளுடன் விளையாடுதல் செல்லப் பிராணிகளை வளர்த்தல் ஆகியவை மனச்சோர்விற்கு அரிய மருந்தாகும். மனச் சோர்விற்கு மிக அற்புதமான மருந்து 'சிரிப்பு' நல்ல நகைச் சுவை துணுக்குகள், புத்தகங்களைப் படித்து அல்லது கேட்டு வாய்விட்டுச் சிரிப்பது மனத்தை உற்சாகப் படுத்தும், இதையே நம் முன்னோர்கள் வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்று கூறினர்.

மனச்சோர்வுடையவர்கள், தான் இறந்துவிடப் போவதாகவோ அல்லது வாழ்க்கை வாழப் பிடிக்கவில்லை என்று ஏதாவது சொன்னால் அதை உதாசீனம் செய்யக் கூடாது. உடனடியாக அவர்களுக்கு தீவிரமருத்துவ உதவி செய்ய ஒருமனநோய் வல்லுநரை

(3ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்தத்திற்கு ஜனாதிபதி தயார்

# நோர்வே சிறப்பு பிரதிநிதி தெரிவிப்பு

[சென்னை]

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக ஜனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்த அறிவிப்பொன்றை விடுவிப்பதற்கு தயாராக இருப்பதாகநோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்திருப்பதாக நோர்வேதூரகப் பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் நான்கு தடவைகள் ஒருதலைபட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்த வேளையில் அதனைஏற்காது யுத்தத்தை நடத்திக்கொண்டே விடுதலைப்புலிகளுடன் பேசலாம் என்ற அரசின் அப்போதைய நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவல் அரசின்மன மாற்றத்தை நோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்தபோது அதனைவிடுதலைப் புலிகள் வரவேற்றிருப்தாக நோர்வேயின் தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்தை அரசு மேற்கொள்வதற்கு முன்பாக மேலும் பலவிடயங்களில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாக விடுதலைப் புலிகள் தம்மிடம் தெரிவித் திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம் முறை கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கும் எரிக்சொல்ஹெய்ம் வன்னிசென்று விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திக்கலாம் என்று தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை நோர்வே தூதுவர் கொழும்புக்கு வரும் வழியில் இந்தியா சென்று வெளியுறவுஅமைச்சர்ஜஸ்மன் சிங்கையும் சந்தித்து விட்டே வருவார் என்று நோர்வே தூதரகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகியதங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(கி/1981)

CDமூலம் பழைய, புதிய பாடல்களை பதிவுசெய்து பெற்றுக் கொள்ள

மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்

238, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

(கி-1982)

T.P. 3649

## பாராட்டு

[நல்லூர்]

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான அறநெறிப் பாடசாலை நடாத்திய திருமுறை மனனப் போட்டியில், தரம் நான்கு மாணவன் செல்வன், கூகதாசன் குமரன் முதலாம் பரிசைப் பெற்றுப் பாராட்டப்பட்டுள்ளார். (உ-103)

## பட்டுவில் ..

ரளின் பின்னரும் நுணாவில் பகுதிக்கு40நாட்களின்பின்பும் மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இது விடயம்தொடர்பாக தென்மராட்சியை சேர்ந்த 300க்கும்மேற்பட்டோர் ஊர்வலமாகச்சென்று அமைச்சருடன் சிலதினங்களுக்கு முன் பேச்சுநடத்தியமைஏற்கனவே தெரிந்ததே. (க

## இரு தமிழ்

பி. ஆர். பி. பெரேரா சிராணி பண்டாரநாயக்கா ஆகியோர் விசாரணைகளை எதிர்வரும் யூன் மாதம் 23ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளனர்.

மூன்றுபிள்ளைகளின் தாயாரான சின்னத்தம்பி சிவமணி, ஏகாம்பரம் விஜயகலா (வயது22) ஆகியோரே தமது அடிப்படைமனித உரிமைகள் மீறப்படுவதாகக் குறிப்பிட்டு மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இம் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி எம்.றெமிடியோசின் அறிவுறுத்தலின் பேரில் சட்டத்தரணி கே எஸ் ரத்தினவேல் ஆஜரானார். (க-5)

## ஈழத் தமிழர்--:

வைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த சில வருடங்களாக ஈழத்தமிழர்கள் பிரச்சினையில இந்தியா பாராமுகம் காட்டி வருகிறது. இந்நிலையில் தங்களின் மகத்தான வெற்றி ஈழத்தமிழ்மக்களுக்கு புரிந்துணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே ஈழத் தமிழ்மக்களின்துயர்துடைக்க ஆதரவு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோமென்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

நாகம்ஸ் (சுன்னாகம்)

அர்ஜுன், ஜோதிகா, மீனா, மணிவண்ணன் நடித்த

ரிதம்

(சினிமாஸ்லிமிற்ரெட்) வெளியீடு

11-00, 2-30 பு. நே: சனி ஞாயிறு பி. ப 6 மணி

(ரீல்ஸ்) (கி-1977)

## மாவனல்ல சம்பவம்

# சம்பந்தப்பட்டோரை உடன் கைது செய்யவும்

## தமிழ் - முஸ்லிம் எம். பிகள் கோரிக்கை

[கொழும்பு]

மாவனல்ல கொழும்பு ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற இன மோதல்களில் சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகளையும் குண்டர்களையும் உடன் கைது செய்ய வேண்டுமெனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் தமிழ் முஸ்லிம் எம்பிகள் ஒன்றுகூடி அரசிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்முஜிபுர் ரஹ்மான் தலைமையில் முஸ்லிம தமிழ் எம். பிக்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர். தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ் தெரிந்த பொலிஸார் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் இ. தொ காங்கிரஸ் ஐ. தொ காங்கிரஸ் அஸ்ரப் அணிகள் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி உட்பட மற்றும் கட்சித்தலைவரும் கலந்து கொண்டனர். [வ]

## புதிய பேருந்துகள் சேவையில் ஈடுபடும் தினம் தீர்மானிக்கப்படவில்லை

அண்மையில் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட்ட 10 புதிய பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது உடனடிச்சாத்தியமில்லை என வடபிராந்திய போக்குவரத்துச்சபைவட்டாரங்கள் தெரிவித்தன.

நிலவும் பேருந்து சாரதி, நடத்துநர் தட்டுப்பாடு காரணமாகவே உடனடியாக பேருந்துகளை சேவையில்ஈடுபடுத்தப்பட முடியாத நிலை காணப்படுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ]

## அபிவிருத்தி தொண்டர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான தெரிவு இன்று வடமராட்சியில்உள்ள பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெறுமென சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கின்அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் நடாத்தப்படும் அபிவிருத்தி தொண்டர் தெரிவுகளுக்காக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டோர் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளிக்கும் படியும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (க)

## நேற்று ஷெல் சத்தங்கள்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பகுதியை அண்டிய பகுதிகளில் நேற்று நள்ளிரவிற்கு சற்றுமுன்பதாக இடை யிடையே சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன

எனினும் பாதிப்பு எதுவும் ஏற் பட்டதாக இச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் தகவல் எதுவும் இல்லை. [வ]

## தமிழக..

## கூட்டணித் தலைவர்கள் கலந்து கொண்டனர்

ஜெயலலிதாவின் பதவி ஏற்பு வைபவத்தில் த.மா.க. தலைவர் ஜி.கே. மூப்பனார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ. வி. கே. இளங்கோவன், கே.வி. தங்கவேலு, திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, மார்க்ஸிஸக் கம்யூனிஸ் கட்சி மாநிலச் செயலாளர் என். சங்கரய்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் ஆர். நல்லகண்ணு ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கலந்து கொள்ளவில்லை.

டான்ஸி நில பேரஊழல் வழக்கில் மூன்று ஆண்டுகள் தண்டனை பெற்றிருந்தமையால் அவர் நான்கு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்திருந்த போதும் அத் நான்கு வேட்பு மனுவும் தேர்தல் ஆணையாளரினால் நிராகரிக்கப்பட்டமைதெரிந்ததே.

ஊழல் குற்றச்சாட்டுஅவர் மீது இருப்பதால் ஆளுநர் அவரை முதல்வர் பதவிக்கு அழைக்க மாட்டார் என்று முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் உட்பட பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர் இத்தகைய கருத்துக்கள் யாவற்றுக்கும் அவர் முதல்வராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இதேவேளை தமிழக முதல்வராக இரண்டாவது தடவையாக பதவி ஏற்ற செல்வி ஜெயலலிதாவிற்கு காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி, பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் இராமதாஸ் உட்பட பல தலைவர்கள் தொலைபேசியில் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். (வ)

## யுத்தத்திற்கான. . .

இந்தியா இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இருந்து பல கோடி ரூபாகளிற்கு கொள்வனவு செய்யப்பட்டகப்பல்களில் பாவனைக்கு தகாத முறையில் தென்பகுதிக்கடற்பரப்பில் தரித்து நிற்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளைபாது காப்புச் செலவினத்தைக்கட்டுப்படுத்த சர்வதேச தலைமை நிதியம் நிபந்தனை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

## தொலைபேசி--:

மாவட்டங்களுக்குமான தொலைபேசி இணைப்புகள் இயங்கவில்லை என யாழ் ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தொலைபேசிச்சேவைகளை இன்று காலை பெரும்பாலும் சீராகுமெனவும், அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## புதுவையில்..-

களைப்பெற்றத.மா.கா.வும் ஆதரவு வழங்குமென பாண்டிச்சேரி காங்கிரஸ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதனால், காங்கிரஸ்சட்ட மன்ற உறுப்பினர்கள் புதுவை முன்னாள் முதல்வர் வைத்தியலிங்கத்தை சட்டமன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கவுள்ளனவென்றும், காங்கிரஸ்தலைவி சோனியாகாந்தி அ. இ. அ. தி மு க பொதுச் செயலரும் முதல்வருமான செல்விஜெயலலிதாவைச்சந்தித்துஅக்கட்சியின் ஆதரவைக் கோரவுள்ளனர்.

இந்நிலையில் காங்கிரஸ் எப்படியுயும் ஆட்சியை அமைக்கும் எனவும் முதல்வராக வைத்தியலிங்கம் தெரிவானாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அசாம் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை ஆதரவைப் பெற்று ஆட்சியை அமைக்கவுள்ளதுடன் பிரதேச காங்கிரஸ்முதல்வராக சரண் கூல்பேஜ் பதவியேற்கவுள்ளதாக அக் கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை அசாம் மாநில முதல்வர் பிரபல்ல குமார் மலிந்த தனது இராஜினாமா கடிதத்தை ஆளுநருக்கு சமர்ப்பித்து விட்டதாகவும், எனினும் புதியஅரசுபதவியேற்கும் வரை தற்போதைய முதல்வரை தொடர்ந்து பதவியேற்குமாறு ஆளுநர் பணித்துள்ளதாக மேலும் அறிவிக்கப்படுகிறது. (வ)

## உண்ணாவிரதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள படையினரைவிடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகோரியும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச்செல்ல அனுமதிக்குமாறு கோரியும் அன்னையர்தினமான நேற்று காணாமற்போன படையினரின் பெற்றோர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இந்தஉண்ணாவிரதம்நேற்றுமாலை கோட்டை ரயில் நிலையம்முன்பாக நடைபெற்றது.

இதில் சுமார் 400 அன்னையர்கள் கலந்து கொண்டனர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட அன்னையர்கள் தமது மகன், மகள் கணவன் மார்களின் படங்களைத் தாங்கிய வண்ணம் காணப்பட்டனர். [வ]

## இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

கடந்த 25ம் திகதி தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரில் 2ம் லெப். அலைவாணி (தெய்வேந்திரம் ஜேந்தினி) ஆனையிறவு, என்ற போராளியும் கடந்த 27ம் திகதி மட்டக்களப்பு தியாகவெட்டவொன் பகுதி பொலிஸ் காவலரண் மீதான தாக்குதலில் லெப். தேவராஜ் (தேவிக்கோடி விமலகாந்தன்) மட்டக்களப்பு, என்றபோராளியும் தமது தரப்பில்உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (வ-5)

## புலிகள் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர்ப் பகுதியில் பொலிசார் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் பத்துப்பேர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (வ-5)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.